17.02.2026

OS No: 559/2019

வா.சா. 1 - கார்த்திகேயன் த/பெ.சேகர்

**<u>1முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

தாவா வழக்கு முதலில் சிவகங்கை மாவட்ட முன்சிப் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இருந்தது என்றால் அது எனக்கு தெரியாது. சிவகங்கை மாவட்ட முன்சிப் நீதிமன்றத்தில் தாவா வழக்கிற்கு முதலில் கொடுக்கப்பட்ட கோப்பு எண்ணானது OS 100/2015 என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி வழக்கு முதலில் தாக்கல் செய்த போது நான் அதில் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். நான் தாவா வழக்கில் IA No. 2/2023 மனுவின் பெயரில் தரப்பினராக சேர்ந்துள்ளேன் என்றால் சரிதான். எனது நிரூபணவாக்குமூலத்தில் எனது வயது 33 என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் சாம்பவிகா பள்ளி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் எனது வயது என்ன என்றால் 7 வயது ஆகும். மேற்படி பள்ளியின் அறக்கட்டளையில் எனது அப்பா, அம்மா சேர்ந்த வருடம் 2006 என்றால் சரிதான். மேற்படி பள்ளிக்கூடம் ஆரம்பிக்கப்பட்டது குறித்தும் எனது அப்பா, அம்மா அறக்கட்டளையில் சேர்ந்தது குறித்தும் எனக்கு நேரடியாக தெரியாது என்றும், எனது அப்பா, அம்மா சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். 2013ம் வருடம் எனக்கு என்ன வயது என்றால் 21 வயது ஆகும், கல்லூரியில் இறுதி ஆண்டு படித்து வந்தேன். எந்த கல்லூரியில் படித்தேன் என்றால் சென்னையில் உள்ள GKM பொறியியல் கல்லூரியில் படித்தேன். கல்லூரியில் நான் விடுதியில் தங்கி படித்தேன் என்றால் சரிதான். ஒவ்வொரு வாரமும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் ஊருக்கு வந்து செல்வேன். எனது அண்ணன் 2013ம் வருடம் எந்த கல்லூரியில் படித்தார் என்றால் அவர் 2013ம் வருடத்திற்கு முன்பே கல்லூரி படிப்பை முடித்துவிட்டார்.

**<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்கு கால அவகாசம் கோரி வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.</u>**

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2026.02.17 12:49:02 +0530